DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 71 /2023 |
| Deposition of witness | : | PW-3 |
| Name | : | செந்தில்குமார் |
| Father's /Husband Name | : | பாண்டியன் |
| Village | : | கும்பகோணம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 37 |
| Occupation | : | இட்லி கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10th day June 2024.
Accused absent and petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் கும்பகோணம் ரயில் நிலையம் அருகில் காமராஜ் ரோட்டில் டிபன் கடை நடத்து வருகிறேன். அ.சா.2 எனது அப்பா. வழக்கில் இறந்துபோன காமராஜ் தெரியாது. விபத்து சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் ரயில் நிலையம் அருகில் காமராஜ் ரோட்டில் ஏசி பஸ் ஸ்டாப்பில் தமிழ் என்ற பெயரில் டிபன் கடை நடத்திவருகிறேன். காலை 07.00 – இரவு 11.00 வரை கடை நடத்துவேன். 02.12.2022 அன்று இரவு சுமார் 09.30 மனியளவில் நான் கடையிலிருந்தேன் என்றாலும், அப்போது நடேசன் மகன் காமராஜ் என்பவர் TN 55 AR 1135 TVS XL 100 இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றபோது எதிரி பார்த்திபன் TN 68 W 7822 என்ற பயணிகள் ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவணகுறைவாகவும் ஓட்டிவந்து காமராஜ் மீது மோதியதாகவும், அதில் காமராஜ்-க்கு தலை, தோள்பட்டை, கை, கால், முதுகில் காயம்பட்டதாகவும், அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும், காமராஜ் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I, Kumbakonam.